## கஹடகஸ்திகிலிய பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுக்களாவை 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 114,127,607 இற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிமை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் / காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதிச் செயலாற்றுகை

-----------------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை ரூபா 410,808 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை ரூபா 1,316,114 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 முத்திரைக் கட்டண வருமானம்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைக் கட்டணம் 2012,2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 3,498,750 தொகை சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 தொலைபேசி செலுத்துகை டவர் கட்டணம்

---

இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/08 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி/ தொலை தொடர்பு டவர்களுக்காக உயரத்திற்கேற்ப கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனினும் 05 செலுத்துகை டவர்களுக்காக அவ்வாறு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---

2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைச் சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---

சபைக்குச் சொந்தமான ரூபா 541,000 பெறுமதியான அரிசி மா அறைக்கும் இயந்திரம் 05 வருடங்களை மிகைத்த காலம் முழுதும் பயன்படுத்தப்படாது செயற்படாது காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்